

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு பங்குனி-சித்திரை ஏப்ரல் 2018 முரசு 11 ஒலி 130

பிரதி ஒன்றுக்கு ரூ. *10/-* ஆண்டு சந்தா ரூ. *120/-*

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

### சிறுவர் சிறுமியர்களுக்கான

# கோடை விடுமுறை சிறப்பு பயிற்சி முகாம்



திருவண்ணாமலையில்

இயற்கைச் சூழலில் 7 நாட்கள்...



**நாள்:**

**மே 2018**

**06 முதல் 13 வரை**

**இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,**
**வாயுலிங்கம் எதிரில், திருவண்ணாமலை.**

## இந்த பயிற்சி முகாமில்...

- நினைவாற்றல் பயிற்சி
- மனோ சக்திக்கான தியான நுட்பங்கள்
- ஒழுக்கநெறி பாடம்
- யோகாசனம்
- பிராணாயாமம்
- ஓவியப் பயிற்சி
- ஜீவகாருண்யம்
- உணவுமுறை

போன்ற சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பெற்றோர்கள் கவனத்திற்கு...

1. பயிற்சியில் கலந்துகொள்ளும் குழந்தைகளை பெற்றோர்கள் மே 06ம் தேதி ஞாயிறு இரவிற்குள் அழைத்துவந்து விட வேண்டும்.
2. 7 முதல் 13 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மட்டுமே அனுமதி.
2. யோகா செய்வதற்கும், படுப்பதற்கும் 2 பெட்ஷீட் எடுத்து வரவும்
3. குறிப்பு எடுக்க நோட்டு. பேனா எடுத்து வரவும்.
4. பெற்றோர்கள் குழந்தைகளுடன் தங்க அனுமதி இல்லை.
5. பெற்றோர்கள் மே 13 ஞாயிறு காலை 8:30க்குள் வந்துவிட வேண்டும்.

**7 நாட்களும் ஆரோக்கிய உணவு & தங்குவதற்கு இடம்**
**இவற்றிற்கு நன்கொடை ரூ.3000/-**

**Bank:** HDFC Bank Ltd., **Name:** Arutperunjothi Vallalar Charitable Trust,
**A/c No.:** 08761450000048, **Branch:** Thiruvannamalai, **IFSC Code:** HDFC0000876

முதலில் பதிவுசெய்யும் 30 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

**முன்பதிவிற்கு: 88835 90659, 80126 80865**



# திருச்செவிக்கு விண்ணப்பம்

எல்லாம் உடைய இயற்கை விளக்கக் கடவுளே! தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற் கிடந்து பசியினாற் பரதவித்து மூர்ச்சித்த போதெல்லாம், பூதகாரிய அமுதத்தை எனக்கு ஊட்டுவித்துப் பசியை நீக்கி மூர்ச்சை தெளிவித் தருளினீர். அன்றியும் தாய் கருப்பையிற் பிண்ட வடிவிற் கிடந்து பேய்வெருட்டாலும் பேரிருட்டாலும் பயந்தபோதெல்லாம், நாதவொலியாற் பேய்வெருட்டையும் விந்து விளக்கத்தாற் பேரிருட்டையுந் தவிர்த்து, என் பயத்தை நீக்கியருளினீர், அன்றி, தாய் கருப்பையின்கண் நேரிட்ட பெருந்தீ, பெருங்காற்று, பேரோசை, பெருவெள்ளம், பெரும் புழுதி முதலிய உற்பாத துரிசுகள் அனைத்தையும் தவிர்த்துக் காத்து, அப்பிண்டவடிவில் எனக்கு ஓரறிவையும் விளக்கி யருளினீர்.

அன்றியும், உலகினிடத்தே பிறந்து அனுபவிப்பதற்குரிய சுபவனுபவப் பெருக்கம், ஆயுட் பெருக்கம் முதலிய நன்மைகளையும் எனக்கு அப்பிண்ட வடிவின்கண்ணே அமைத்தருளினீர்.

அன்றியும், சோணிதக் காற்றின் அடிபடல் யோனி நெருக் குண்ணல் முதலிய அவத்தைகளால் அபாயம் நேரிடவொட்டாமற் காத்து இவ்வுலகினிடத்தே தோற்றுவித் தருளினீர். இங்ஙனம் புரிந்த தேவரீரது திருவருட் பெருங்கருணைத் திறத்தை எங்ஙன மறிவேன் எவ்வாறு கருதுவேன் என்னென்று துதிப்பேன்!

திருச்சிற்றம்பலம்

# பக்தியின் படிநிலை

சென்ற மாத தொடர்ச்சி...

எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பாக இங்கு வள்ளல் பெருமானார் ஒரு கருத்தை திருஅருட்பாவில் பதிவு செய்கிறார்.

**நல்லவரே எனினும் உமை நாடாரேல் அவரை**
**நன்கு மதியாள்...**

**நாவினால் உனை நாள்தொறும் பாடுவார்**
**நாடுவார் தமை நண்ணிப் புகழவும்**
**ஓவிலாது உனைப் பாடவும் துன்பெலாம் ஓடவும்**
**மகிழ்வோங்கவும் செய்குவாய்...**

இவை இருவேறு பாடல்களைக் கொண்டுள்ளது. இந்த உலகில் நல்லவர்கள் அநேகம் பேர் உள்ளனர். ஆனால் அவர்கள் கடவுளை நினைக்காதவர்களாக, இறை அடியவர்களாக இல்லையானால் அவர் போன்றோரை வள்ளல் பெருமானார் விரும்பாதவராகவும் மாறாக உத்தமராகவும், இறை நாட்டம் உள்ளவராகவும், இறைவனை நாள்தோறும் பாடிப் பரவுகின்றவராகவும் இருந்தால் முதலில் அவர்தம் புகழைப் பாடிப் பிறகே கடவுளின் புகழைப் பாட வள்ளல் பெருமானார் விரும்புவதாகவும் கூறுகிறார் என்றால் இறைவன்பால் பத்திபூண்டு பாடிப் பணிவது எவ்வளவு முக்கியம் என்பதை உணர வேண்டும்.

## 4. பாத சேவனம்:

இந்த பாத சேவனம் என்பது இறைவனுடைய அடியார்களுக்கு சேவைபுரிதல் ஆகும். நம் ஔவை மூதாட்டி பாடல் ஒன்றில் 'இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்' என்று கூறியுள்ளார். அதாவது கடவுள் எங்கே இருக்கிறார் என்ற கடினமான கேள்விக்கு ஔவையார் 'கடவுள் உண்மையான தொண்டர் உள்ளத்தில் வாழ்கிறார்' என்று நமக்கு ஓர் பேருண்மையை அறிவித்துள்ளார். அப்படிப்பட்ட ஒரு அடியாருக்கும் தொண்டருக்கும் நாம் நம்மால் முடிந்த சேவையை செய்தல் வேண்டும். நல் அடியாரின் குணங்கள் எத்தன்மையது என பின்வரும் அருட்பா பாடலில் காண்க.

**எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்**
**தம்உயிர்போல் எண்ணி உள்ளே**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்**
**யாவர்அவர் உளந்தான் சுத்த**
**சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும்**
**இடம்எனநான் தெரிந்தேன் அந்த**

**வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன்**
**சிந்தைமிக விழைந்த தாலோ.**

இப்பாடலுக்கேற்ப ஒரு பெரியோர் வார்த்தையை இங்கு ஞாபகப்படுத்த யாம் விரும்புகிறோம்.

**'நல்லார் ஒருவர்க்கு செய்த உபகாரம் கல்மேல் எழுத்துப்போல் காணுமே'** என்பதுவே அது.

*ரமண மகரிஷியின் தாயார் சிறிது காலம் கழித்து அவருடன் தங்கிவிட்டார். ரமணரோடு அவருக்கு உதவிக்காக கந்தசாமி என்பவரும் தங்கியிருந்தார். ரமணர் அவருடைய தாயார் குளிப்பதற்காக விருபாட்ச குகையிலிருந்து இறங்கி வந்து இப்போது இருக்கின்ற கந்தாசிரமத்தின் அருகில் உள்ள அணையில் நீர் எடுத்து செல்வார். தினமும் இவ்வாறு அவர் சிரமப்படுவதை கண்ட கந்தசுவாமி என்ற பக்தர் அணை உள்ள பகுதிக்கு அருகே இருந்த கரடுமுரடான பகுதியை சீராக்கி, சுத்தம் செய்து, அங்கே ரமணரை தங்கும்படி கூறினார். பக்தரின் வேண்டுகோளை ஏற்ற ரமணர் அங்கேயே தங்கினார். அவர் அங்கிருந்தோரிடம் இன்றிலிருந்து இந்த இடத்தை கந்தாசிரமம் என்றே அழையுங்கள் இந்த இடம் கந்தசாமியின் பெயரிலேயே விளங்கட்டும் என்றார். இவ்வாறு நல்லார் ஒருவருக்கு செய்த உபகாரத்தால் இன்றளவும் அவரது பெயர் நிலைபெற்றிருக்கிறது.*

## 5. பத்தியம்:

**"பத்தியம் சிறிதும் உற்றிலேன் உன்பால் பத்தி ஒன்றிலேன்"** என்பார் வள்ளல் பெருமானார். நோயுற்றவருக்கு மருத்துவர் மருந்து கொடுக்கும்போது பத்தியம் சொல்லுவார். பத்திய உணவால் தீராத நோயே இல்லை என்கிறது இயற்கை மருத்துவம். ஆக உடற் பிணிக்கே பத்தியம் தேவை என்றால் உயிர் பிணிக்கு அவசியம் தேவை அல்லவா. அதைத்தான் கீழே காணவிருக்கிறோம்.

## *செய்யத்தக்கவை*

**அ.ஜீவகாருண்யம்:**

*வள்ளல் பெருமானார் இறைவனை அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் என்பார். அவருக்கென சிதம்பரம் அருகில் வடலூர் பெருவளியில் ஆலயம் ஒன்றை எழுப்பினார். அதற்கு சத்திய ஞானசபை எனப் பெயரிட்டார். இங்கு ஜாதி, சமயம், உயர்ந்தோர், தாழ்ந்தோர், ஏழை, பணக்காரன், நாடு, மொழி என எந்த பேதமும் இன்றி மனித தேகம் கொண்ட யாவரும் இங்கு வரவேண்டும்,*

ஞானத்தைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவே ஞானசபை எனப் பெயரிட்டார். ஆனால் அதன் உள்ளே நுழைவதற்கு ஒரேவொரு பத்தியத்தை வைத்தார். **"கொலை புலை தவிர்த்தோர் மட்டுமே உள்ளே புகுதல் வேண்டும்"** என்பதுதான் அது. அதாவது உயிர்கள் மீது இரக்கம் இல்லாதவர்களுக்கு கடவுள் அருள் கிடைக்காது என்பதை இவ்வண்ணமாக உரைக்கின்றார்.

சன்மார்க்கத்தில் ஈஸ்வர பக்தி என்பது எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருப்பதை அறிதலேயாகும். மேலும் "அருள் என்பது கடவுள் தயவு; ஜீவகாருண்யம் என்பது ஜீவர்கள் தயவு" என்பார் பெருமானார். எனவே தயவு சொரூபராகிய இறைவனை, பிற உயிர்களிடம் நாம் காட்டும் தயவைக் கொண்டே அடைய முடியும் என்கிறார் நம் பெருமானார்.

"ஜீவகாருண்ய ஒழுக்கம் (மேலான விரதம்) இல்லாமல் ஞானம், யோகம், தவம், விரதம், ஜெபம், தியானம் முதலியவைகளைச் செய்கின்றவர்கள் கடவுள் அருளுக்குச் சிறிதும் பாத்திரம் ஆகார்கள். ஜீவகாருண்யம் இல்லாது செய்யப்படுகின்ற செய்கைகளெல்லாம் பிரயோஜனம் இல்லாத மாயாஜாலச் செய்கைகளேயாகும் என்று அறிய வேண்டும்"

பசித்தவர்களுக்குப் பசியாற்றுவித்து இன்பத்தை உண்டு பண்ணுகின்ற ஜீவகாருண்ய ஒழுக்கமாகிய மேலான விரதமானது, தேவர்கள், மனிதர்கள், பிரம்மச்சாரிகள், சமுசாரிகள், தபசிகள், சந்நியாசிகள், ஆண் ஜாதியர், பெண் ஜாதியர், வார்த்திபர், வாலிபர், உயர்ந்தோர், தாழ்ந்தோர் முதலிய யாவராலும் அவசியம் செய்யத் தக்கதென்பது கடவுளாணை யென்றறிய வேண்டும்.

இப்படியாக அனைத்து மக்களும் ஜீவகாருண்ய பத்தியத்தில் அவசியம் இருக்க வேண்டும் என்கிறார் நம் பெருமானார்.

**ஆ. இனியவை கூறல்:**

**முகந்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்**
**இன்சொ லினதே அறம்.**

அதாவது **யாவர்க்குமாம் ஒரு இன்னுரை தானே** என்ற திருமூலர் வாக்கிற்கிணங்கவும், **இன்சொல்லாடல்** என்று வள்ளல் பெருமானார் அருளிய இந்திரிய ஒழுக்கத்திற்கு இணங்கவும் அமைந்துள்ளது இக்குறள். ஒருவரின் முகம்பார்த்து இனிமையாகப் பேசுவதுகூட தருமம் என்று உறுதிபட கூறுகிறார் திருவள்ளுவர்.

**இ.சாதுக்கள் சார்பு:**

அவசியம் சாதுக்களுடன் சார வேண்டும் என்கிறார் பெருமானார்.

*அது நமக்கு சிவபக்தி, ஜீவகாருண்யம், வைராக்கியம் முதலிய சுப குணங்களை உண்டாக்கும். முக்தி அடைய முக்கியமான பத்தியம் 'சாதுக்கள் சார்பு'.*

**ஏ.பொறுமையுடைமை:**

**பிறர் தனக்கு துன்பம் செய்யினும் அதை சகித்து தான் அடங்கி இருத்தல்** *என்ற வள்ளல் பெருமானின் அறிவுரை இங்கு கவனிகத்தக்கது. இது விசேஷ பத்தியம்.*

**நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்**
**மலையினும் மாணப் பெரிது**

*என்பார் வள்ளுவர். அதாவது தன் நிலையிலிருந்து மாறுபடாமல் அடங்கி ஒழுகுவோனுடைய உயர்வு, மலையின் உயர்வை விட மிகவும் பெரிதாகும் என்பதாம். பக்தன் தன் வாழ்நாளில் அவசியம் கடைபிடிக்க வேண்டிய ஒழுக்கத்தில் இது மிக அவசியமாகும்.*

**உ.உண்மை உரைத்தல்:**

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**
**செய்யாமை செய்யாமை நன்று**

*எனும் வள்ளுவர் வாக்கும்,* **பொய் சொல்லாதிருத்தல், கோள் சொல்லாதிருத்தல், மண்ணோரம் பேசி (பொய் சாட்சி கூறி) வாழ்வழித்தேனோ, ஆசைக் காட்டி மோசம் செய்தேனோ** *என்ற வள்ளல் பெருமானாரின் வாக்கும் உண்மை பேசுதல் எல்லா அறத்தையும் செய்ததற்கு ஒப்பாகும் என்றும், பொய் கூறலால் எல்லா பாவத்தையும் செய்ததற்கு ஒப்பாகும் என்றும் நமக்கு உணர்த்துகின்றன.*

## *செய்யத்தகாதவை:*

*1.கள் 2.களவு 3.காமம் 4.பொய் 5.கொலை இவ்வைந்தும் கொடிய துக்கத்தை உண்டுபண்ணும். இதில் ஒன்றை அடைந்தாலும் மற்றவை வந்து சூழ்ந்துகொள்ளும் என வள்ளல் பெருமானார் இப் பஞ்சமகா பாவங்களையும் ஒரு மனிதன் வாழ்க்கையில் செய்யத்தகாதன பட்டியலில் வகுத்தருளியுள்ளார்.*

## 6.ஆத்ம பாவனை:

*இந்த தேகத்தில நாம் யாரெனில் ஆன்மா. கோடி சூரியப் பிரகாசம். இது வள்ளல் பெருமானாரின் வாக்கு. நாம் எப்போதும் ஆன்மா என்ற நினைவோடு இருக்கப் பழக வேண்டும். இதன்றி நாம் நம்மை இந்த உடலாக எண்ணிக் கொள்வதால் கடவுளின்*

*சந்நிதானத்தில் சென்று பிரார்த்தனை செய்யும்போது கூட உடலுக்கான தேவைகளையே வேண்டுகிறோம். எப்போது நாம் ஆன்மா என நினைக்கிறோமோ அப்போது தான் ஆன்மாவிற்கான தேவைகளையே இறைவனிடம் பிரார்த்தனை செய்வோம். எனவே நாம் இந்த உடல் அல்ல என்பதையும், தொழில் ரீதியான அடையாளங்களையும் விட்டு, ஆன்மா என்ற தெளிவை அடைய வேண்டும்.*

## 7.கடவுளிடம் நன்றி உணர்வோடு வாழ்தல்:

**அஞ்ஞான இருளில் ஏதும் தெரியாது கிடந்த எங்களை அவ்விருளை விட்டு நீக்கி உயர் அறிவுடைய இம்மனித தேகத்தில் செலுத்தி அருளிய தேவரீரது பெருங்கருணை திறத்தை என்னென்று கருதி என்னென்று துதிப்பேன்** *என வள்ளல் பெருமானும்,* **இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!** *என மாணிக்கவாசக சுவாமிகளும் இறைவனின் தனிப்பெருங்கருணைத் தன்மையை நெக்குருக வாழ்த்தி பரவுகின்றனர். இங்ஙனம் நம் மகான்களும் ஞானிகளும் இறைவனை நன்றியுணர்வோடு வாழ்த்தும்போது நாமும் அவர்வழி நிற்றல் மரபுதானே. நமக்கு அநேக இன்ப துன்ப அனுபவங்களைக் கொடுத்து பக்குவப்படுத்தி அருள்பாலிக்கும் கடவுளை மறவாமல் அவரிடம் நன்றி உணர்வோடு இருக்க வேண்டும்.*

## 8.சரணாகதி அடைதல்:

**எம்மிறையவரே! இது பரியந்தம் யானாகத் தேடியதோர் பொருள் என்பதில்லை. ஆகவே தேவரீர் பெருங்கருணையால் என்னை உய்யக் கொள்ள உபகரித்தருளிய உடல், பொருள், ஆவி என்னும் மூன்றையும் அறியாமையால் 'யான் எனது' என்று கொண்டதோர் சுதந்திரமானது துன்ப இன்ப விளைவுக்கு ஆதாரமாய் இன்றைய வரையில் என்னைப் பற்றியிருந்த ஒன்றை யான் பெரும் பொருளாக எண்ணி நின்றனன்.** *இஃது வள்ளல் பெருமான் அருளியது. இதில்* **'யான் எனது என்று கொண்டதோர் சுதந்திரமானது துன்ப இன்ப விளைவுக்கு ஆதாரம்'** *என்பதை நாம் கருத்தில் கொள்ள வேண்டிய பகுதி.*

*மேலும் நம் பெருமானார் உரைநடைப் பகுதியில்* **சத்திய சங்க விண்ணப்பத்தில்** *அருளியதாவது;* **திருவருட் சுதந்திரம் நமக்கு எந்த வழியால் கிடைக்கும் என்று அறியத் தொடங்கிய தருணத்து, 'எனது யான்' என்னும் தேக சுதந்திரம், போக சுதந்திரம், ஜீவ சுதந்திரம் என்னும் மூவகைச் சுதந்திரங்களும் நீங்கியவிடத்தே கிடைக்கும் என்று தேவரீர் திருவருளால் அறிவிக்க உள்ளபடி அறிந்தேன்** *என்பதாகும். மாறிமாறி*

*வரும் துன்ப இன்ப அவஸ்தைகளுக்குக் காரணமான இந்த யான் எனதை எங்ஙனம் நீக்குவது?* **என்னால் ஆவதொன்றும் உனக்கு இல்லை எனினும் உன்னால் வாழுகின்றேன்** *எனப் பணிந்து சரணாகதி அடைவது ஒன்றே வழி.*

**எப்படிநின் உள்ளம் இருக்கின்றது என்னளவில்**
**அப்படிநீ செய்க எனக்கு அன்புடைய ஐயாவே**
**எவ்வண்ணம் நின்கருத்திங்கு என்னளவில் எண்ணியதோ**
**அவ்வண்ணம் செய்க எனக்கு அன்புடைய ஐயாவே - திருவருட்பா**

*இந்த சரணாகதி நிலைதான் நமக்கு ஆத்மானுபூதியை கொடுக்கிறது. நமக்குமேல் எல்லாம் ஒருவன் இருக்கிறான் என்று அறிந்து அவனை சரணடைதலே சரணாகதி. இது பக்தியின் இறுதிப் படிநிலையாகும். மேலும் இது பக்தியின் முதிர்ச்சியுமாகும்.*

*இந்த வகையான படிநிலைகளைக் கடைபிடித்து பக்தியில் கறைந்து நாம் அனைவரும் பெறுதற்கரிய பெருஞ்சுகத்தை அடைவோமாக.*


**திருச்சிற்றம்பலம்**

# மூத்தோர் சொல் அமிர்தம்

*டைட்டானிக் கப்பல் மூழ்கும் பொழுது மூன்று கப்பல்கள் அதனருகே இருந்தன. அந்தக் கப்பல்களுள் ஒன்றன் பெயர் சாம்ப்சன். அது டைட்டானிக்கிலிருந்து ஏழு மைல் தொலைவில் இருந்தது. டைட்டானிக்கிலிருந்து அபாய குறியாக வெள்ளையாக பெரும்புகை வருவதை அவர்கள் கண்டார்கள். ஆனால் அந்தக் குழுவினர் சட்டவிரோதமாக கடல்நாய்களை (seal) வேட்டையாடிக் கொண்டிருந்ததாலும், இதனால் பிடிப்பட்டுவிடகூடாது என்பதாலும், பயத்தில் அவர்கள் கப்பலை திருப்பி, டைட்டானிக்கிற்கு எதிர்திசையில் சென்றுவிட்டனர். இந்த கப்பல் நம்மில் யாரெல்லாம் தங்களின் சுயநலத்திற்காக பாவச் செயல்களை செய்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ அவர்களை குறிக்கிறது. அவர்களால் கண்ணெதிரே பிறர் துன்பப்பட்டுக் கொண்டிருந்தால்கூட அதை கவனிக்காமல் உதவ முடியாமல் போய்விடுகிறது.*

*இரண்டாவது கப்பலின் பெயர் கலிஃபோர்னியன். அது டைட்டானிக்கிலிருந்து பதினான்கு மைல் தொலைவில் இருந்தது. அக்கப்பல் பனிப்பாறைகளால் சூழப்பட்டிருந்தது. அக்கப்பலின்*

*மாலுமி டைட்டானிக்கிலிருந்து வெண்புகை வருவதை பார்த்தார். ஆனால் தங்கள் சூழ்நிலை சாதகமாக இல்லாத காரணத்தாலும், இருட்டியதாலும் அவர் விடியும் வரை காத்திருக்க முடிவெடுத்து உறங்கச் சென்றுவிட்டார். குழுவினரும் இப்பொழுது நம்மால் எதுவும் செய்ய இயலாது என்று தங்களை தாங்களே சமாதான படுத்தி கொண்டனர். இந்த கப்பல் நம்மில் யாரெல்லாம் இப்போது என்னால் எதுவும் செய்ய முடியாது என்கிறார்களோ அவர்களை குறிக்கிறது. இவர்கள் சூழ்நிலை சரி இல்லை, சூழ்நிலை சரியான பின் எதுவும் செய்யலாம் என்றிருப்பவர்கள்.*



*கடைசி கப்பல் கார்பாத்தியா. இந்த கப்பல் சரியாக டைட்டானிக்கிலிருந்து தெற்கு திசையை நோக்கி ஐம்பத்தெட்டு மைல் தொலைவில் இருந்தது. ரேடியோவில் டைட்டானிக்கை பற்றிய வேதனையான செய்தி வந்து கொண்டிருந்தது. அதை கேட்டவுடன் அக்கப்பலின் மாலுமி கடவுளிடம் டைட்டானிக் இருக்கும் சரியான திசையை காட்ட வேண்டும் என்று பிரார்த்தித்து, உடனே கப்பலை திருப்பி, கடலில் உரைந்த பனிகளுக்கிடையே முழுவேகத்துடன் ஓட்டிச் சென்றார். இந்தக் கப்பலால் டைட்டானிக்கிலிருந்த 705 பயணிகளைக் காப்பாற்ற முடிந்தது.*

*தங்கள் கடமைகளை செய்யாமல் நழுவுவதற்கு எப்பொழுதுமே தடைகளும், காரணங்களும் உண்டு. நன்மை செய்ய உண்மையாக விரும்புபவர்கள் எந்தத் தடைகளையும் பாராமல் நன்மை செய்வர்.*

**இடனில் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார்**
**கடனறி காட்சி யவர். – திருக்குறள் (218)**

*ஒப்புரவு அறிந்து ஒழுகுதலாகியத் தன் கடமை அறிந்த அறிவை உடையவர், செல்வ வளம் இல்லாத காலத்திலும் ஒப்புரவுக்குத் தளர மாட்டார். (ஒப்புரவு – பிறர்க்கு உதவுதல்)*

---

*ஒருவர் தனது ஃபோர்ட் காரில் சென்று கொண்டிருந்த போது, வண்டி பழுதாகி வழியிலேயே நின்றுவிட்டது. அவருக்கு கார்களை பற்றி நிறைய தெரியும், அதுவும் குறிப்பாக இந்த மாடல் காரை பற்றி*

நன்கு தெரியும். எனவே அதை தானே சரிசெய்ய முற்பட்டார். பலமுறை பலவிதமாக சரி செய்து, காரை ஸ்டார்ட் செய்தார். ஆனால் கார் ஸ்டார்ட் ஆகவில்லை. நம்மில் பலபேர் மாதிரியே அவரும் பிடிவாதமாக யாரையும் உதவிக்கு அழைக்காமல் தானே சரிசெய்து விடவேண்டும் என்று வேலையை தொடர்ந்தார். இன்னும் வேறு வேறு விதமாக சரிசெய்து பார்த்தார். ஆனால் வேலைக்கு ஆகவில்லை.



சில நிமிடங்கள் சென்ற நிலையில் அவ்வழியாக வந்த ஒரு பெரிய சொகுசு கார் அங்கு அந்த ஃபோர்ட் கார் பழுதாகி நிற்பதை பார்த்து அதன் அருகே வந்து நின்றது. அதிலிருந்து ஒரு பெரியவர் கீழே இறங்கி, சில நொடிகள் அவர் சரிசெய்து கொண்டிருந்ததை கவனித்தார். பிறகு அந்த பெரியவர் அவரிடம், கார் என்ஜினில் ஒரு குறிப்பிட்ட பகுதியை சுட்டிக்காட்டி அதை சரி செய்யுமாறு கூறினார். அவர் தன்னைவிட இந்த காரை பற்றி இவருக்கு என்ன அதிமாக தெரிய போகிறது என்று நினைத்தாலும், வேறு வழியில்லாமல் அவர் சொன்னதை சரி செய்து காரை ஸ்டார்ட் செய்தார். கார் ஸ்டார்ட் ஆகிவிட்டது. அவர் ஆச்சரியத்துடன், அப்பெரியவரிடம், “எனக்கு கார்களை பற்றி நிறைய தெரியும். எனினும் இந்தச் சிறிய விஷயம் தெரியாமல் போய்விட்டதே. இது எப்படி உங்களுக்கு தெரிந்தது. நீங்கள் யார்?” என்றார்.



அதற்கு அப்பெரியவர், “என்னுடைய பெயர் ஹென்றி ஃபோர்ட். நான் தான் இந்த காரை கண்டுபிடித்தேன்” என்றார்.

நமக்கு அனைத்தும் தெரியும் என்று நினைக்கக்கூடாது. எப்பொழுதெல்லாம் நம் வாழ்வில் இடர்கள் வருகிறதோ அப்பொழுதெல்லாம் நாம் அதை இறைவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும். நம்மை படைத்த இறைவனுக்குத் தான் அதை சரி செய்ய நன்கு தெரியும்.

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது. – திருக்குறள் (7)**

தனக்கு ஒப்புமை இல்லாத தலைவனுடைய திருவடிகளைப் பொருந்தி நினைக்கின்றவர் அல்லாமல், மற்றவர்க்கு மனக்கவலையை மாற்ற முடியாது.

**திருச்சிற்றம்பலம்**

# திருமந்திரம்

**உள்ளே விட்டு வெளியே தேடுவர்**

**காயக் குழப்பனைக் காயநன் னாடனைக்**
**காயத்தி னுள்ளே கமழ்கின்ற நந்தியைத்**
**தேயத்துளே எங்கும் தேடித் திரிவர்கள்**
**காயத்துள் நின்ற கருத்தறி யாரே.**

*ஆகாயம் என்னும் பூதத்தை ஏனைய பூதங்களுடன் கலந்து உலகத்தைப் படைத்தவனை, சிதாகாயம், பரமாகாயம் என்ற வெளியைத் (அறிவு வெளி) தன் இருப்பிடமாகக் கொண்டவனை, நம் உடம்பிலும் ஒளிமயமாக விளங்கும் நந்தியை மக்கள் நாட்டில் பல தலங்களில் திரிந்து தேடுவர். தம் உடம்பிலேயே அவன் உறைவதை அறியாது போனவர்.*

**குருவருள்**

**கறுத்த இரும்பே கனகம் அது ஆனால்**
**மறித்து இரும்பு ஆகா வகையது போல**
**குறித்த அப்போதே குருவருள் பெற்றால்**
**மறித்தும் பிறவியில் வந்து அணுகாரே.**

*கறுத்த நிறம் வாய்ந்த இரும்பு வேதிப்பான் தொழிலால் செம்பொன் ஆகும். அங்ஙனம் செம்பொன்னானபின் மீண்டும் இரும்பாகாது. அதுபோல ஆன்மாக்கள் பக்குவம் பெற்றால் குருவருள் வாய்க்கும். அக்குருவருள் பெற்றவன் மீண்டும் பிறவிப் பெருங்கடலில் வந்து விழமாட்டார்கள்.*

**துறக்க வேண்டா தோத்திரம் செய்க**

**கைவிடல் ஆவது ஒன்றில்லை கருத்தினுள்**
**எய்தியவனை இயல்பினால் ஏத்துமின்**
**ஐவருடைய அவாவினில் தோன்றிய**
**பொய்வரு டைய புலன்களும் ஐந்தே.**

*புலன்களை அடக்குவதற்கு பொருள் எதனையும் துறக்க வேண்டாம். ஐம்பொறிகளின் மூலம் வரும் உணர்வே புலன். அதனால் மனம் கொள்ளும் அவா புலனிச்சை எனப்படும். அது நுட்பமானது. பொய்யானது (பொய்யான மயக்கம்). அதனை வெல்ல வேண்டும். அதற்குச் சிந்தையில் இறைவனை நிறுத்தி, மனதாலும் சொல்லாலும் போற்றிப் புகழ்க.*

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# நாமம் கெடக் கெடும் நோய்

- தயவுதிரு குப்புசாமி அவர்கள், சேலம்

ஒரு குழந்தை பிறக்கும் பொழுது அதற்குத் தான் தனி உயிர் என்ற உணர்வு இல்லை. பசி போன்ற உடல் தேவைகள் மட்டுமே உண்டு. அக்குழந்தை தன்னைப் பிரபஞ்சத்தின் ஒரு பகுதியாகவே கருதுகிறது. உண்மையில் இந்நிலை ஒரு ஞானியின் நிலையை ஒக்கும். ஞானி அறிந்து செய்கிறார். குழந்தை அறிவதில்லை. இது ஒன்றே வேறுபாடு. அதனால் நாம் மீண்டும் ஒரு குழந்தையின் நிலையை அடைய வேண்டும். எனவே அதற்கு முதல் தகுதி **பெயர் அற்ற மனித நிலை.**

துரதிருஷ்டவசமாக, சமுதாயத்தில் ஓர் அங்கத்தினராக வாழவேண்டிய நிர்பந்தத்தின் காரணமாக ஒருவனுக்குப் பெயர் இன்றியமையாததாகின்றது. இச்சடங்கை விழாவாகவே நடத்தி 'நாமகரணம்' சூட்டப்படுகிறான். கரணம் என்றால் பிரிக்க முடியாத மனத்தின் கூறுபாடுகள் என்று பொருள். மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்ற நான்கு அந்தக்கரணங்களுடன் புதிதாக செயற்கையான இந்த ஐந்தாவது கரணத்தையும் அந்த விநாடியில் இருந்து மனிதன் பெற்றுக் கொள்கிறான். அந்த விநாடியில் இருந்து, காற்று மண்டலத்தில் இருந்து துண்டிக்கப்பட்டு தனித் தீவாகிறான். இந்தப் பெயரில் இருந்து கடைசிவரையிலும், ஏன் அதற்குப் பிறகும்கூட மனிதனால் விடுதலை அடையவே முடிவதில்லை. அந்த விடுதலை அடையாமல் பேரறிவு சாத்தியமே இல்லை. இந்தப் பெயரை இரப்பர் (Rubber/Eraser) கொண்டு ஒரு நிலையில் மனிதன் அழிக்க முயல்கிறான். அந்த இரப்பருக்குப் பெயர்தான் யோகம், ஞானம், சாதனம் என்பவையெல்லாம். இன்னும் சொல்லப் போனால் காமம், வெகுளி, மயக்கம் இவை மூன்றும் தொழில்பட ஆரம்பிப்பதே இந்த நாமம் என்ற பீடத்திலிருந்து தான். **அதனால் தான் துறவிக்கு முதன்முதலில் பெயர் நீக்கம் செய்து ஆனந்த நிலையைச் சுட்ட ஏதோ ஓர் ஆனந்தா என்று பெயரிடுகின்றனர்.**

ஒரு கருத்தோ, ஒரு பொருளோ இருப்பதற்கு உலகில் நீடிப்பதற்கு நாமரூபங்கள் காரணமாகின்றன. இதில் காமம், வெகுளி, மயக்கம் என்பவை குணங்கள் அல்லது ரூபங்கள். அவற்றைப் பெயரிட்டு சுட்டச்சுட்ட மனிதமனத்தில் அவை திடமான இடத்தைப் பற்றிக் கொள்கின்றன. ஒவ்வொரு முறை அவற்றின் பெயரை மனிதன் உச்சரிக்கும் பொழுதும் அவற்றிற்கு வலிமை கூடுகின்றது. ஆகவே முதலில் அவற்றின் பெயரை நீக்க அந்தச் சொற்கள் இல்லாமல்

அவற்றைப் பார்க்க, உணர, அனுபவிக்க மனிதன் பழகிக் கொள்ள வேண்டும். இதுவே அவற்றை வெல்வதற்கு முதற்படி.

ஒரு மாமரத்தை, மாமரம் என்ற சொல்லை நீக்கிவிட்டு ஒரு குழந்தையானது அதை முதன்முதலில் பார்ப்பதைப் போல் உன்னால் பார்க்க முடியுமா? என்பார் ஜே.கிருஷ்ணமூர்த்தி. உலகம் இயற்கையில் பெயர்கள் அற்றது. பெயர்களைச் சூட்டுவதன் மூலம் நாம் உண்மையில் உலகில் உள்ள பொருள்களை முழுவதுமாக அறிவதில்லை. பெரும்பாலும் பெயர்களையே அறிகிறோம்.

வானத்தில் உள்ள நிலவை உணர்வது வேறு. அமாவாசை அன்று நிலவு என்ற சொல்லை யாரோ உச்சரிக்க நாம் அறிவது வேறு. உண்மையான நிலவு வேறு, அகராதியில் உள்ள நிலவு என்ற மூன்று எழுத்துக்களின் வரி வடிவமும், ஒலி வடிவமும் வேறு.

உலகமானது சுருங்கி ஓர் அகராதி ஆகிவிட்டது. அகராதியின் மூலம் அறியலாம் ஆனால் உணரமுடியாது. இதைச் சாதாரணமாக மனிதர்கள் புரிந்து கொள்வதில்லை. 'சொல் பொருள் அல்ல' என்பார் ஜே.கிருஷ்ணமூர்த்தி. இந்த உண்மையைப் புரிந்து கொள்ளாமையே இன்றைய மனிதனின் பெரும்பாலான பிரச்சினைகளுக்குக் காரணம். முக்கியமாக மத, அரசியல், பொருளாதாரப் பிரச்சினைகள் பெயரே உண்மைப் பொருளாகி விடுகிறது.

இறைவன் எல்லையில்லாத அறிவு படைத்தவன் என்பது வரையறை, எனவே ஒரு பெயரைக் கொண்டு அந்த எல்லையைச் சுருக்கிவிட நினைப்பது தவறு. சுட்டுவதற்கு வேறு வழியில்லாத காரணத்தினால் பேச்சு வசதிக்காக ஏதோ சில பெயர்களை நாம் பயன்படுத்த வேண்டியுள்ளது. மாணிக்கவாசகரும் 'ஒரு நாமம் ஓர் உருவம் இல்லாதார்க்கு ஆயிரம் திருநாமம் சூட்டித் தெள்ளேனம் கொட்டாமோ' என்றது இக்கருத்துப் பற்றியே. யூத மதத்தினரும் தங்களுடைய தெய்வமான ஜெகோவா என்ற சொல்லுக்கு பெயரிடப்பட முடியாதவன் என்ற அர்த்தத்தைக் கூறுவர்.

எனவே வெறும் பெயர் வாழ்வியல் தளத்தையோ, வேறு பரிமாணத்தையோ நிர்ணயித்து விடுகிறது என்பதை அதி ஜாக்கிரதையாக இருந்து உணர்ந்து கொள்ள வேண்டும். இதுவே தெளிவு. இங்ஙனம் பெயர்கள் நம் அனுபவத்தில் இருந்து விலக்கப்பட்டா லொழிய வாழ்வையோ உலகையோ அதன் மெய்ஞான நிலையில் பார்க்க முடியாது என்பதே கீழ்வரும் குறட்பாவின் முடிவு.

**எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு. – திருக்குறள் (423)**

*திருச்சிற்றம்பலம்*




# தெய்வத் தீந்தமிழ் திருஅருட்பா

உருவெளியே உருவெளிக்குள் உற்றவெளி உருவே
உருநடுவும் வெளிநடுவும் ஒன்றான ஒன்றே
பெருவெளியே பெருவெளியில் பெருஞ்ஜோதி மயமே
பெருஞ்ஜோதி மயநடுவே பிறங்குதனிப் பொருளே
மருவொழியா மலரகத்தே வயங்குமொளி மணியே
மந்திரமே தந்திரமே மதிப்பரிய மருந்தே
திருவொழியா தோங்குமணி மன்றினடத் தரசே
சிறுமொழி என்றிகழாதே சேர்த்து மகிழ்ந்தருளே. 1

மருந்தானை மணியானை வழுத்தா நின்ற
மந்திரங்கள் ஆனானை வான நாட்டு
விருந்தானை உறவானை நண்பினானை
மேலானைக் கீழானை மேல்கீழ் என்னப்
பொருந்தானை யென்னுயிரிற் பொருந்தினானைப்
பொன்னானைப் பொருளானைப் பொதுவாய் எங்கும்
இருந்தானை இருப்பானை இருக்கின்றானை
எம்மானைக் கண்டுகளித்து இருக்கின்றேனே. 2

என்னிதய கமலத்தே இருந்தருளுந் தெய்வம்
என்னிரண்டு கண்மணிக்குள் இலங்குகின்ற தெய்வம்
பொன்னடிஎன் சென்னியிலே பொருந்தவைத்த தெய்வம்
பொய்யாத தெய்வம்இடர் செய்யாத தெய்வம்
அன்னியம்அல்லாத தெய்வம் அறிவான தெய்வம்
அவ்வறிவுக் கறிவாம்என் அன்பான தெய்வம்
சென்னிலையில் செம்பொருளாய்த் திகழ்கின்ற தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 3

தூண்டாத மணிவிளக்காய்த் துலங்குகின்ற தெய்வம்
துரியதெய்வம் அரியதெய்வம் பெரியபெருந் தெய்வம்
மாண்டாரை எழுப்புகின்ற மருந்தான தெய்வம்
மாணிக்க வல்லியைஓர் வலத்தில்வைத்த தெய்வம்
ஆண்டாரை ஆண்டதெய்வம் அருட்ஜோதித் தெய்வம்
ஆகமவே தாதிஎலாம் அறிவரிதாந் தெய்வம்
தீண்டாத வெளியில்வளர் தீண்டாத தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 4



# தெரிந்து தெளிதல்

**ஆ**காயத்தில் பறக்கின்ற பறவையையும், நீரில் நீந்தும் மீனையும், தரையில் வேகமாக ஓடுகின்ற குதிரையையும் கண்டதால் மனித எண்ணத்தில் எழுந்த அவா, அவனது வாழ்க்கையில் பெரும் சிந்தனைக்கு வித்திட்டது. அந்த சிந்தனையின் விளைவுகளால் ஏற்பட்ட விஞ்ஞான கண்டுபிடிப்புகளே இன்று விமானங்களாய், கப்பல்களாய் மற்றும் மோட்டார் வாகனங்களாய் உருவெடுத்து மனித வாழ்க்கையில் துரித போக்குவரத்துக்கான பயன்பாட்டு கருவிகளாய் விளங்குகின்றது. நாளுக்கு நாள் இது போன்ற கருவிகளில் ஏற்படுகின்ற மாற்றங்களால் மனிதனின் ஆழ்ந்த சிந்தனையில் உண்டாகின்ற வளர்ச்சியினை கண்ணுறமுடிகின்றது.

இப்பூவுலகில் புற போக வாழ்க்கையில் வசதிகளுடன் வாழ எண்ணம் கொண்ட மனிதர்களின் அவா பூர்த்தியடைந்ததா? என்றால் கேள்விக்குறிதான். இந்த விஞ்ஞான முன்னேற்றங்கள் அவர்களது வாழ்வில் போராட்டங்களை உருவாக்குகின்றன. இவ்வகையான வசதிக்கு ஆசைப்பட்டு, அமைதி சீர்குலைவை சகித்துகொண்டு வாழ்கின்றவர்களே பெரும்பாலானோர்.

இதற்கு உதாரணமாக, தெருவில் நிற்க வைத்திருக்கும் சைக்கிளின் சக்கரத்தை சுற்றி விளையாடும் குழந்தை, அந்த சைக்கிளையே தன்மேல் தள்ளிக்கொண்டு அழுவதை போல, உலகத்தாரின் செயல்கள் அவர்களுக்கே துன்பத்தை தந்து வாழ்க்கையில் அமைதியை கெடுத்துவிடுகிறது என்பதே உண்மை.

இதனின்று வேறுபட்டு மலைகளிலும், வனாந்தரங்களிலும், குகைகளிலும், ஊன் உறக்கமின்றி தவமேற்கொண்டு சிந்தனையை அகமுகமாக செலுத்திய மெய்ஞானிகள் இப்புவியில் இருந்தபடியே அண்டங்களையும் அவற்றில் வாழும் உயிர்களையும் ஆராய்ந்து, அதனினும் மேலான இறையின்பத்தையும் அனுபவித்து அருளியதை என்னென்று சொல்வது. அந்த தவசீலர்கள் மட்டுமே நிலையாகிய மெய்யான இறையின்பத்தையும், நிலையற்ற பொய்யான உலகபோக இன்பத்தையும் வேறுபடுத்தி ஆனந்தமாய் இருந்தார்கள்.

அந்த தவசீலர்கள் தாங்கள்மட்டும் இன்பமாய் இருந்து விடவில்லை, தங்களை நாடி வருபவர்களையும் அமைதியுடனும் ஆனந்தமாகவும் வாழ வழிகாட்டி அருளினார்கள். அவர்கள் வகுத்தருளிய வாழ்க்கை முறை, மனிதர்களுடைய துறவற வாழ்க்கையிலும், இல்லற வாழ்க்கையிலும் அவர்களுக்கு ஏற்படுகின்ற

இன்பதுன்பங்களினால் உண்டாகும் இலாபநட்டங்களை சமமாக பாவிக்கின்ற மனப்பக்குவத்தை அளிக்கக்கூடியதாய் இருந்தது. ஆனால் மனிதர்கள் அஞ்ஞானத்தினால் பொய்யான விஞ்ஞானத்தை மெய்யென கருதி மெய்ஞானத்தில் இருந்து நழுவிவிட்டார்கள்.

இத்தகைய மாயையிலிருந்து மீண்டு முக்திக்கு வருபவர்கள் ஒரு சிலரே. அவர்களும் ஆன்மீக தேடுதலுக்காக வருகின்றபொழுது தெளிவற்ற சிந்தனையினாலும் மனக்குழப்பத்தினாலும் தவறான துன்மார்க்கிகளிடமும் சிக்கி வீண்போகின்றனர். மெய்ஞான நாட்டமுடையவர்களுக்கு மெய்யான குருமார்கள் கிடைப்பது அரிது.

அதிலும் உலக வாழ்வில் ஒட்டாத மனம், எதையோ தேடி அலைகின்ற தெளிவற்ற சிந்தனை இவைகளினால் உண்டாகின்ற அழுத்தமான சூழ்நிலை இதனால் சமுதாயம் இவர்களை பொறுப்பற்றவர்களென்று ஒதுக்கிவிடுகின்றது. இவ்வாறானவர்கள் எவ்வாறு சற்குருவையும் சத்மார்க்கத்தையும் தேடி பெறமுடியும்.

**சிந்தை மயங்கித் தியங்குகின்ற நாயேனை**
**முந்தை வினைதொலைத்துன் மொய்கழற்கா ளாக்காதே**
**நிந்தைஉறும் நோயால் நிகழவைத்தல் நீதியதோ**
**எந்தைநீ ஒற்றி எழுத்தறியும் பெருமானே. – திருவருட்பா**

திருவொற்றியூரில் வீற்றிருக்கும் பெருமானே, மனக் கலக்கத்தை அடைந்து தெளிவற்றுள்ள நாயேனை வருத்தும் பழவினையைப் போக்கி நின் வீரக் கழல் அணிந்த திருவடிகளுக்குத் தொண்டனாய் ஆக்காது கண்டவர் இகழும் நோய் வகை போந்து வருத்த, என் தந்தையான நீ என்னைக் கை விட்டு விடுதல் முறையோ என நம் வள்ளல் பெருமானார் தெளிவற்ற சிந்தனையில் உள்ளவர்களின் மனபோக்கினை தமது திருவருட்பாவில் துள்ளியமாக இயம்பியுள்ளார். அவர்களுடைய செய்கைக்கு தீர்வும் அருளியுள்ளார் என்பது குறிப்பிடதக்கதாகும்.

தெளிவற்ற சிந்தனையென்பது கரணகருவிகளான மனம், சித்தம், புத்தி, அகங்காரம் ஆகியன சூழ்ந்த ஓர் செயல்பாடாகும்.

இளைஞன் ஒருவன் முத்தியில் நாட்டம் கொண்டு ஞான குருவினை தேடி சென்றான். அவன் தனது பயணம் நெடுந்தூரமாகக் கூட இருக்கலாமென மனதில் எண்ணிகொண்டான். அவனுடன் சைத்தான் ஒன்று வருவதை அவன் அறியவில்லை.

அவன் தன்னுடைய பயணத்தின் சில நாட்களிலேயே பக்கத்து நாட்டிற்கு சென்றான். அவனுடன் வந்த சைத்தான் சும்மா இருக்கவில்லை, அந்த நாட்டில் வாரிசில்லை என்பதை அறிந்து அரசனை இவன் சந்திக்குமாறு செய்தது.

அரசன் இளைஞனின் வலிமையையும் அழகையும் கண்டு வியந்து, தன்னுடைய நாட்டை அவனுக்களித்து அரசனாக்குவதாக கூறினார். இளைஞன் அதற்கு சம்மதியாமல் தன் இலட்சியத்தை அரசனுக்கு தெளிவுபடுத்தி அங்கிருந்து புறப்பட்டு சென்றான். இதனை கடந்து சென்றவனுக்கு அடுத்ததொரு சோதனை காத்திருந்தது.

சைத்தான் தனது தோல்வியை எண்ணி வருந்தாது அடுத்த போட்டிக்கு தன்னை தயார் செய்துகொண்டது.

இளைஞன் தன் தேடுதலை தொடர்ந்து அடுத்த நாட்டிற்கு சென்றான். அந்த நாடெங்கிலும் விழா கோலம் பூண்டிருந்தது. மக்கள் மிகவும் சந்தோஷமாக இருந்தனர். இவன் இவற்றை கண்டவாறு நடந்து சென்றுகொண்டிருந்தான்.

அவனுடன் வந்த சைத்தான் தனது வேலையை துவங்கிற்று. அந்த நாட்டில் எதற்கு கோலாகலம், விழா என்பதனையெலாம் விசாரித்தது. அந்நாட்டின் இளவரசிக்கு சுயம்வரமென்பதையறிந்து இவனை வேடிக்கை பார்ப்பது போல் அங்கு அழைத்து சென்றது. இளைஞனும் சென்று ஓராமாய் நின்று பார்த்துக்கொண்டிருந்தான்.

இளவரசியும் இளைஞனின் வலிமையையும், இளமையையும் கண்டு மயங்கி அவனுக்கு மாலையிட வந்தாள். அதற்குள் இளைஞன் அவளை தடுத்து நிறுத்தி தன்னுடைய குறிக்கோளை விளக்கி தன் பயணத்தை தொடர்ந்தான். இம்முறையும் சைத்தான் தொல்வியுற்றது.

இளைஞன் அந்த நாட்டிலிருந்து புறப்பட்டு நெடுந்தூரம் பயணம் செய்து, அந்தி பொழுது சாய்ந்த நேரத்தில் ஒரு சத்திரத்தை அடைந்தான். வானம் இருள துவங்கியது. சைத்தானும் தன் வேலையை துவங்கியது.

இராப்பொழுது ஆனதும் இளைஞன் உண்டு உறங்கசென்றான். படுத்த சிறிதுநேரத்தில் கண்ணயர்ந்தான். நன்றாக உறங்கிக் கொண்டிருக்கும் வேலையில் புரண்டு படுத்தான், அவனது தலை பக்கம் ஏதோ ஒன்று இருந்தது, புரண்டு படுத்தவனின் கைகள் அதன் மேல் பட்டதனால் திடுகிட்டு விழித்துக் கொண்டான், உடனே தன் கைமேல் பட்டது என்னவென்று பார்க்கையில் அதுவோ ஒரு அழகிய பேழை, அதனை திறந்து பார்த்தவுடன் ஆச்சரியம் அடைந்தான். ஏனென்றால் அந்த பேழையினுள் விலை மதிக்கமுடியாதளவுக்கு பொன்னும் வைரமும் இருந்தன. இவன் அவற்றை கண்டு மயங்காமல் பேழையை சத்திரத்து காரியதரிசியிடம் ஒப்படைத்து நிம்மதியுடன் படுத்து உறங்கி காலையில் தனது தேடுதலுக்காக புறப்பட்டான். சைத்தான் தோல்வியை கண்டு வருந்தாமல் அவனுடன் சென்றது.

*சில நாட்கள் பயணத்தை தொடர்ந்தவன், சிறிய கிராமத்தை அடைந்தான். அங்கு சிலரிடம் விசாரித்ததில் அக்கிராமத்திற்கு சற்று அருகில் ஓர் ஞானகுரு இருப்பதை அறிந்து கொண்டான். இப்பொழுதும் சைத்தான் அவனுடன் சென்றது.*

*அவன் தேடி சென்ற குருவின் இருப்பிடம் மிகவும் அமைதியுடனும் அழகாகவும் இருந்தது. அவனும் அனுமதிபெற ஆசிரமத்திலிருப்பவரை அணுகினான். அதற்கு அவர் குரு சத்சங்கத்திலிருப்பதாக தெரிவித்தார். அவனும் வந்தது நல்லநேரமென்று எண்ணி உள்ளே சென்றான்.*

*அதற்குள் வாசலில் நின்ற சைத்தான் அவனுக்கு முன் உள்ளே சென்று ஒருமூளையில் அமர்ந்தது. அவனும் உள்ளே சென்று குருவை வணங்கி அமர்ந்தான்.*

*அவனுடைய எண்ணம்போல் குரு, இலட்சணம் பொருந்தியவராக இல்லாமலிருந்தது மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது. அவர் மிகவும் குள்ளமாகவும், சாதரணமாகவும், காட்சிக்கு எளியவராகவும் இருந்தார். இதனால் அவன் மனம் லேசாக சலனமடைந்தது, தன்னை தானே சமாதானப் படுத்திக் கொண்டான்.*

*குருவின் சத்சங்கமும் அவனுக்கு பிடித்தார்போல் இல்லை. அவர் உலகியலாக எதையெதையோ பேசிக்கொண்டிருந்தார். அவன் எதிர்பார்த்தது போல் பெரிய செய்திகள் எதுவும் சத்சங்கத்தில் இல்லாததால் மிகுந்த வருத்தத்துடன் அங்கிருந்து வெளியேறினான். இம்முறை சைத்தான் வெற்றி பெற்றதை எண்ணி மகிழ்வுடன் அவன் பின்னே சென்றது.*

*இளைஞன் ஒருவன் சத்சங்கத்தில் அமர்ந்து உடனே எழுந்து செல்லுவதை கண்ட சீடர்கள் குருவிடம் தாங்கள் கண்டுகொள்ளாதது ஏன் என்று வினவ, அவரும் அதற்கு அவன் உள்ளே வந்தவுடனே எல்லாவற்றையும் தான் ஞானதிருஷ்டியில் அறிந்ததாகவும், அவனுடன் சைத்தான் ஒன்று அவனை கெடுக்க வந்து கொண்டிருந்ததை அவன் கவனிக்கவில்லையெனவும், பலமுறை தோல்வியுற்ற அந்த சைத்தான் இம்முறை வென்றது என்றும் கூறினார்.*

***அந்த சைத்தான் ஒன்றும் பேயில்லை, அவன் உள்ளேயிருந்த அகங்காரமென்னும் அறியாமையே அதுயென விளக்கமளித்தார்.***

*இளைஞனின் அகங்காரம் உள்ளிருந்து செயல்பட்டு அவனுடைய வாழ்வில் ஒரு ஞான குருவை இழக்கச் செய்தது. இதை பின்வரும் திருஅருட்பா*

**அகங்காரக் கொடுங்கிழங்கை அகழ்ந்தெறிய அறியேன்**
**அறிவறிந்த அந்தணர்பால் செறியும்நெறி அறியேன்**

**நகங்கானம் உறுதவர்போல் நலம்புரிந்தும் அறியேன்**
**நச்சுமரக் கனிபோலே இச்சைகனிந் துழன்றேன்** என்கிறது.

செருக்கு என்ற கொடிய கிழங்கை என் உள்ளத்தினின்று பிடுங்கி எறியும் வகையை அறியாதவனாய், அறிய வேண்டியவற்றை அறிந்த அந்தணரிடம் சேரும் வகை யாது என அறியாதவனாய், மலைகளிலும் காடுகளிலும் உறையும் துறவியரைப் போல் ஆன்ம நலத்தை விரும்பியதில்லை; நச்சுக் கனிகளையுடைய மரத்தைப் போல் பல்வேறு ஆசைகளைப் பெற்று வருந்துகின்றவனாய்... நம் அருட்பெருமானார் திருவருட்பா ஆறாம் திருமுறையில் சிந்தனை தெளிவு இல்லாதவர்களுக்காக 'முறையீடு' என்னும் பதிகத்தில் பத்துபாக்கள் அருளியுள்ளார்கள்.

சிந்தனை தெளிவற்றவரின் மனம் ஒரு குழம்பிய குட்டை, இருள் சூழ்ந்த இடம். குழம்பிய குட்டையிலிருந்து நீர் எடுக்கமுடியாது, இருளான இடத்தில் குடியிருக்க முடியாது. குட்டையை தெளிவடைய செய்வதற்கும், இருளில் ஒளி பரப்ப செய்வதற்கும் சான்றோர்களின் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதால் மட்டுமே முடியும்.

இதனையே திருமூலர், "குருட்டினை நீக்கும் குருவினை கொள்வார்" என்று இயம்பியுள்ளார். இதில் குருடு என்பது அஞ்ஞானம், அதனை நீக்குகின்ற குருவினை தெரிந்து தேர்வு செய்து இணைந்து கொள்ளுதல் வேண்டும்.

உலக வாழ்க்கையில் மனிதர்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்படுகின்ற பிரச்சனைகளுக்கு அவர்களின் மனம், சித்தம், புத்தி, அகங்காரம் என்னும் அந்தக்கரணங்களே காரணமாய் அமைகிறது. அந்தக்கரணங்களை தெளிவுற செய்வதற்கும், பிரச்சனைகளிலிருந்து எளிதில் விடுபடுத்திகொள்வதற்கும் நற்சிந்தனை, இறைபக்தி, சான்றோருடன் இணங்குதல், நன்நூல் பயின்றல் போன்றவற்றை முன்னோர்கள் அறிவுறுத்தியிருக்கிறார்கள்.

நம் வள்ளல் பெருமானார், "பெருங்குணம் பற்றுக" என்கிறார்.

உயர்ந்த சிந்தனையுடையவராக இருத்தல் வேண்டும், அப்பொழுதுதான் செயலும் சிறப்புடையதாக அமையும், இதற்கு பெருங்குணத்தினை பழகி கொள்ளுதல் வேண்டும். ஒவ்வொரு மனிதனும் இவைகளை கடைபிடிப்பதனால் பிரச்சனைகளில் சிக்காமல் தெளிந்த மனத்துடன் செயல்படலாம்.

இதற்கு உதாரணமாக ஒரு கதையைப் பார்ப்போம்.

"பெரியவர் ஒருவர் எப்போது பார்த்தாலும் தன்னுடைய வீட்டு வாசலில் அமர்ந்தபடி திருஅருட்பா படித்துக் கொண்டே இருப்பார். இளைஞன் ஒருவன் பல நாட்களாக இதனை கவனித்துக் கொண்டே இருந்தான்.

ஒரு நாள் அவரிடம் வந்து கேட்டான், "தாத்தா! எப்பப் பார்த்தாலும் இந்த புத்தகத்தையே படிச்சிட்டு இருக்கீங்களே. இதை எத்தனை நாளா படிக்கிறீங்க?" என்றான்.

பெரியவர் சொன்னார், "ஒரு அம்பது அம்பத்தஞ்சு வருஷம் இருக்கும்"

"அப்படின்னா இந்தப் புத்தகம் உங்களுக்கு மனப்பாடம் ஆயிருக்குமே! அப்புறம் ஏன் இன்னும் படிக்கிறீங்க?" என்றான்.

தாத்தா சிரித்தபடி "எனக்கு ஒரு உதவி செய். நீ செஞ்சு முடிச்சப்புறம் நான் பதில் சொல்றேன்" என்றார்.

இளைஞன், "என்ன உதவி தாத்தா?" என்றான்.

பெரியவர் ஒன்றும் பேசாமல் பக்கத்தில் இருந்த ஒரு மூங்கில் கூடையை எடுத்தார். அதில் அடுப்புக் கரி இருந்தது. அதை ஒரு மூலையில் கொட்டினார். பல நாட்களாகக் கரியை சுமந்து சுமந்து அந்தக் கூடையின் உட்புறம் கருப்பாக மாறி இருந்தது.

பெரியவர் "தம்பி, அதோ இருக்குற ஆத்துல இருந்து இந்தக் கூடையில தண்ணி எடுத்துட்டு வா" என்றார். இளைஞனுக்கு சிரிப்பு வந்தது. இருந்தாலும் பெரியவர் சொல்லி விட்டதால் எடுத்துச் சென்று தண்ணீர் கொண்டு வந்தான். அவன் வந்து சேருவதற்கு முன்பே எல்லா நீரும் கீழே வழிந்தோடியது.

பெரியவர், "இன்னொரு முறை கொண்டு வா". என்றார்,

இளைஞன் மீண்டும் சென்றான். ஆனால் மூங்கில் கூடையில் தண்ணீர் எப்படி நிற்கும்? மீண்டும் சிந்திப் போனது.

பெரியவர், "தாத்தாவுக்காக இன்னும் ஒரே ஒரு முறை மட்டும்" என்றார்.

இளைஞன் ஒரு முடிவுக்கு வந்தான், "இம்முறை மட்டும் அவர் சொல்கிறபடி செய்து விட்டு திரும்பிப் பார்க்காமல் ஓடிவிடுவோம். அவர் எந்தப் புத்தகத்தை எத்தனை முறை படித்தால் எனக்கென்ன வந்தது?" என்று தண்ணீரை எடுத்தான். வழக்கம் போலவே எல்லாத் தண்ணீரும் தரையில். "தாத்தா, இந்தாங்க உங்க கூடை. இதில் தண்ணீ நிக்காதுன்னு உங்களுக்குத் தெரியுமா தெரியாதா? எதுக்கு என்னை இந்தப் பாடு படுத்தனீங்க' என்றான்.

அவர் புன்னகையோடு சொன்னார், "இதுல தண்ணீ நிக்காதுன்னு எல்லாருக்கும் தெரியும். நீ முதல்ல தண்ணீர் எடுக்கப் போகும் போது இது எப்படி இருந்தது?" என்றார்.

இளைஞன், "ரொம்ப அழுக்குப் படிஞ்சு கருப்பா இருந்தது" என்றான்.

"இப்போ பார்" என்றார். தண்ணீர் பட்டுப் பட்டுக் கூடை சுத்தமாகி வெளுத்திருந்தது.

பெரியவர் சொன்னார், "தம்பி, நீ கேட்ட கேள்விக்கு பதில் இதுதான். எத்தனை முறை தண்ணீர் எடுத்தாலும் மூங்கில் கூடை நிரம்பவே இல்லை. ஆனால் **ஒவ்வொரு முறையும் கூடை சுத்தமாகிட்டே இருந்தது. அது போலத்தான் எத்தனை முறை அருட்பாவ படிச்சாலும் முழுவதும் மனப்பாடம் ஆயிடும்னு சொல்ல முடியாது. ஆனா படிக்கிற ஒவ்வொரு முறையும் உள்ளுக்குள்ள இருக்கும் அழுக்கும், கறையும் சுத்தமாகிட்டே போகும்"** என்றார்.

இளைஞனுக்குள்ளே என்னென்னவோ செய்தது. "தாத்தா, எனக்குள்ளேயும் நிறைய அழுக்கு இருக்குது. எனக்கும் இந்தப் புத்தகம் கிடைக்குமா'' என்றான். "நிச்சயமாப்பா!'' என்றபடி தாத்தா வீட்டுக்குள்ளிருந்து ஒரு திருஅருட்பா புத்தகத்தை எடுத்து வர எழுந்தார்."

மனிதனின் எண்ணத்தில் உள்ள அழுக்கு நல்லதை பழக பழக தானாக விலகும். எண்ணற்ற தவசீலர்கள் தங்கள் அனுபவங்களை நமக்கு வழிமுறையாக நிறைய புத்தகங்களில் அருளியுள்ளதை அறிவோம்.

ஆயினும் நம் வள்ளல் பெருமானார் ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையில் எவற்றையெல்லாம் கடைபிடிக்க வேண்டுமென்பதை பற்றியும், உணவுமுறை பற்றியும், இறை தொழுதல் பற்றியும், மனிதன் காலையில் கண்விழிப்பது முதல் இரவு துயிலச் செல்வது வரை அவனது பழக்கவழக்கங்கள் பற்றியும் தமது உரைநடைபகுதியிலுள்ள **நித்திய கரும விதியில்** மிகவும் தெள்ளதெளிவாய் அருளியுள்ளார்கள். இதில் சிறப்பு விதியென ஆன்மீக சாதகர்களுக்கும், பொது விதியென இல்லறத்தார்க்கும் பகுத்தளித்திருப்பது மிகவும் சிறப்புடையதாகும்.

நம் வள்ளல் பெருமானார், மனிதர்கள் மேலும் இயம நியமங்களை கடைபிடித்து வாழ்வதற்காக இந்திரிய ஒழுக்கம், கரண ஒழுக்கம் முதலியவற்றையும் சமுதாயத்தில் மனிதர்கள் ஒருவருக்கொருவர் அன்பை பரிமாறி பிரச்சனையின்றி உள்ளத் தெளிவோடும், கருணையோடும், அமைதியுடனும் மற்றும் இன்பமாய் வாழ உயிரிரக்க வழிபாடாம் ஜீவகாருண்ய ஒழுக்கத்தையும் அருளியுள்ளார்கள்.

மனிதனாய் பிறந்த ஒவ்வொருவரும் வள்ளல் பெருமானார் அருளிய திருவருட்பா திருமுறைகளையும், திருவள்ளுவர் அருளிய திருக்குறளையும், திருமூலர் அருளிய திருமந்திரத்தையும், மூவர் அருளிய தேவாரத்தினையும், மாணிக்கவாசக பெருமானார் அருளிய திருவாசகத்தையும் தகுந்த சான்றோரிடம் கற்று அதை செயல் படுத்தினால் வாழ்வில் எந்த பிரச்சனைகளுமின்றி உள்ளத்தெளிவுடனும் சீரும் சிறப்போடும் வாழ்வாங்கு வாழ்வோமென்பதே திண்ணம்.

திருச்சிற்றம்பலம்

**Advertisement**

## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

Wings of Wisdom

**Books for All Ages**

| Unlimited Books Starts @ INR 1200/. | |
|---|---|
| Scheme | Books at a Time |
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |
| Door Delivery Available* | |

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

# SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755



# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

இறந்தவர் எழுக என்று எண்ணியாங்கு எழுப்பிட
அறந்துணை எனக்கு அருள் அருட்பெருஞ்ஜோதி – அகவல் (870)

இறந்தவர் எழுக - இறந்துபோன ஒருவர் மீண்டும் உயிர்பெற்று எழுக

என்று எண்ணியாங்கு எழுப்பிட- என்று எண்ணியவாறு, என்று சங்கற்பித்தவாறு எழுப்பிட

அறந்துணை எனக்கு அருள் - எனக்குத் தன் அருளறத்தை, துணையாக கொடுத்தருளிய

அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி

இறந்த ஒருவரை, எழுக என வள்ளற்பெருமான் மனத்தால் எண்ணியவுடனேயே அவர் உயிர்பெற்று எழ, இறந்தவரை எழுப்ப (எழுப்பிட) தன் அறந்துணையாக எனக்கு அருளிய, இறந்தாரை எழுப்பும் வல்லமையை (ஆற்றலை) எனக்கு அருளிய அருட்பெருஞ்ஜோதி. இங்கு இறந்தாரை எழுப்புவது, எண்ணியாங்கு, சங்கற்ப மாத்திரையால் எழுப்புவது. இனிவருவது, செத்தவர் எழுக எனச் செப்பியாங்கு, வாக்கால் சொன்ன மாத்திரத்திலேயே எழுப்புவது.

செத்தவர் எழுக எனச் செப்பியாங்கு எழுப்பிட
அத்திறல் எனக்கு அருள் அருட்பெருஞ்ஜோதி – அகவல் (872)

செத்தவர் எழுகென - செத்து பிணமாகிக் கிடக்கும் ஒருவரை மீண்டும் உயிர்பெற்று எழுக என

செப்பியாங்கு எழுப்பிட - சொல்லியவாறு மீண்டும் உயிர்பெற்று எழுப்பிட

அத்திறல் - அவ்வல்லமையை, அவ்வாற்றலை

எனக்கு அருள் - எனக்குக் கொடுத்தருளிய

அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதி

முன்னே 'எண்ணியாங்கு' என்று உரை செய்த நம் பெருமானார் இங்கே 'செப்பியாங்கு' என்கிறார். இவ்வேறுபாட்டை உற்று நோக்குக. முன்னது சங்கற்ப ஆற்றல் எண்ணத்தின் ஆற்றல். பின்னது வாக்கின் ஆற்றல். மூவர் முதலானவர்களது வாக்கின் ஆற்றல் இறந்தவரை எழுப்பிற்று.

மனத்தால் எண்ணி (சங்கற்பத்தால்) எழுப்புதல் ஒரு நிலை. வாக்கால் கூறி (பாடல் செய்து) எழுப்புதல் ஒருநிலை. கண்ணால் பார்த்த மாத்திரத்திலேயே (திருநோக்கத்தால்) எழச்செய்வது ஒருநிலை. ஞானிகளின் மனம், வாக்கு, காயம் மூன்றுமே செத்தாரை எழப்புரியும். செத்தாரை எழுப்புவதைப் பற்றி இங்கே சில கருத்துக்களை உறுதியாகக் கூற விரும்புகிறோம்.

*செத்தாரை எழுப்புதல் என்பது, உயிர் இழந்தவர்களை மீண்டும் அதே உடலில் உயிர்பெற்று எழச் செய்வதன்று. உணர்வு இழந்தவர்களை உணர்வு பெற்று எழச் செய்வதுதான் என்று கூறகின்றனர் அறிஞர்கள் சிலர். இவையெல்லாம் ஏற்புடையதாகாது. சொல் வன்மையால் மழுப்புவதாகும். உண்மையில் செத்தாரை எழுப்புவதென்பது, பிணத்தை உயிர் பெற்றெழச் செய்வதே. வள்ளல் பெருமானார் கர்மசித்தி, யோகசித்தி, ஞானசித்தி எனும் மூவகை சித்திகளைப் பற்றி உரைநடைப் பகுதியில் அருளியுள்ளதைக் காண்க.*

*ஆறாம் திருமுறை சுத்த சிவநிலை எனும் தலைப்பின் கீழ் வரும் நாற்பத்தேழு வெண்பாக்களும் பெருமான் பெற்ற பெரும்பேறுகளைக் கூறுவன. அதில் மூன்று திருப்பாடல்கள் ஈண்டு கவனிக்கத்தக்கவை.*

**செத்தாரை எல்லாம் திரும்ப எழுப்புதல்இங்கு**
**எத்தால் முடியுமெனில் எம்மவரே – சித்தாம்**
**அருட்பெருஞ்ஜோதி அதனால் முடியும்**
**தெருட்பெருஞ் சத்தியம் ஈதே.**

**இவ்வுலகில் செத்தாரை எல்லாம் எழுகஎனில்**
**எவ்வுலகும் போற்ற எழுந்திருப்பார் – செவ்வுலகில்**
**சிற்றம்பலத்தான் திருவருள் பெற்றார் நோக்கம்**
**உற்றவரை உற்றவர்கள் உற்று.**

**யான்புரிதல் வேண்டுங்கொல்! இவ்வுலகில் செத்தாரை**
**ஊன்புரிந்து மீள உயிர்ப்பித்தல் – வான்புரிந்த**
**அம்பலத்தான் நல்லருளால் அந்தோ நான்மேற்போர்த்த**
**கம்பலத்தால் ஆகும் களித்து.**

*முதற்பாடலில், செத்தாரை எழுப்புதல் அருட்பெருஞ்ஜோதி அதனால் முடியும் என்றார். இரண்டாவது பாடலில் சிற்றம்பலத்தானின் திருவருள் பெற்றவரின் திருநோக்கம் உற்றவரை, உற்றவர்களால் எழுப்ப முடியும் என்கிறார்.*

*சிற்றம்பலத்தான் திருவருள் பெற்றவர் வள்ளல் பெருமானார். அவரின் திருநோக்கம் உறப் பெற்றவர் அவருடைய சீடர். அச்சீடரின் திருநோக்கத்தை உற்ற ஒருவரால் செத்தாரை எழுப்ப முடியும் என்கிறார்.*

*மூன்றாவது வெண்பாவில் வள்ளல் பெருமானார் “செத்தாரை எழுப்பும் அற்புதத்தை நான் செய்யவும் வேண்டுமோ. அப்பணியை என் உடம்பின் மீது போர்த்தப் பெற்றுள்ள உரோமத்தால் ஆகும்” என்று அருளியுள்ளார். இங்கே ‘கம்பலம்’ என்றால் ‘உரோமம்’ என்று பொருள். வள்ளல் பெருமான் எற்பித்துளைதொறும் அமுததாரைகள் ஏற்றப்பெற்றவர். அமுதம் மயிர்க்கால்தோறும் தேங்கப்பெற்றவர். அவரது மயிர் செத்தாரை எழுப்பும் என்பதில் வியப்பென்ன?*

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

**ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை**

| | |
|---|---|
| காலை உணவிற்கு | – ரூ.2,500/– |
| மதிய உணவிற்கு | – ரூ.6,500/– |
| இரவு உணவிற்கு | – ரூ.3,500/– |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு | – ரூ.5,000/– |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) | – ரூ.2,500/– |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) | – 15 லிட்டர் |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through:**

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை – 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**+91 9487454688**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி




- ஆழ்நிலை தியானம்
- மௌனம்
- யோகாசனம்
- பிராணாயாமம்
- பக்தி
- சத்சங்கம்
- மூலிகைக் குறிப்புகள்

போன்றவை கற்றுத் தரப்படும்.

**நாள்: மே 18, 19 & 20 வெள்ளி, சனி & ஞாயிறு**
மூன்று நாட்கள் முழுவதும்

**இடம்: வள்ளலார் சத்திய யோக சாலை,**
பெருமாள் மலை அடிவாரம், அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

**முன்பதிவிற்கு: 9597719535, 9443489849**

## பயிற்சியில் கலந்துகொள்ளும் அன்பர்கள் கவனத்திற்கு

1. பயிற்சியில் கலந்துகொள்வோர் மே 17 – ஆம் தேதி வியாழன் இரவிற்குள் வந்துவிட வேண்டும். சிறுவர்கள் அனுமதியில்லை.
2. 17 வயதிற்கு மேல் உள்ளவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
3. டார்ச் லைட், தண்ணீர் பாட்டில் கண்டிப்பாக எடுத்து வரவும்.
4. அன்பர்கள் 3 நாட்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு படுப்பதற்கும், யோகா செய்வதற்கும் 2 பெட்ஷீட், அணிவதற்கு ஆண்கள்: டீ.ஷர்ட், ஷார்ட்ஸ் மற்றும் பெண்கள்: சுடிதார் போன்ற வசதியான ஆடைகளை எடுத்துவரவும். குறிப்பு எடுக்க நோட்டு பேனா எடுத்து வரவும்.
5. பயிற்சியில் மூன்று நாட்கள் முழுவதும் கலந்துகொள்ள வேண்டும். மே 20 ஞாயிறு மாலை 5 மணிக்கு முகாம் முடிந்துவிடும்.

**பஸ் ரூட்:** பொள்ளாச்சியிலிருந்து பஸ் எண்: 16, 27, 58 (கடைசி பஸ் இரவு 9:30க்கு)
உடுமலையிலிருந்து பஸ் எண்: 28, 34 (கடைசி பஸ் இரவு 8:30க்கு)

**உங்களுக்கு நீங்களே இந்த மூன்று நாட்கள் வாய்ப்பளியுங்கள்.**
**மூன்று நாட்களும் கலந்துகொள்வோர்க்கு மட்டுமே அனுமதி**

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly April 2018, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
WPP License No. TN/PMG(CCR)/WPP 582/2018-2019
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

திருவண்ணாமலையில்
சித்ரா பௌர்ணமியை முன்னிட்டு

# ஆன்மீக சத்சங்க விழா



நிகழும் விளம்பி வருடம்
சித்திரைத் திங்கள் 16ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை (29.04.2018) அன்று

- அகவல் பாராயணம்
- சிறப்பு சத்சங்கம்
- திருவருட்பா இசைக் கச்சேரி
- அன்னதானம்
- திருவருட்பா இலவச புத்தகம் வழங்குதல்

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

ஏப்ரல்
29
2018
ஞாயிறு

இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,
திருவண்ணாமலை.

தொடர்பு:
8883590659
9443489849



அனைவரும் வருக! திருவருள் பெறுக!!

திரு/திருமதி

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865